# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8029163

1. District மாவட்டம் : திருப்பூர் PS: காவல்நிலையம் ஊ.ஒ.த.பி Year: ஆண்டு 2018 FIR No.: மு.த.அ. எண் 03/2018/AC/TPR Date: நாள் 12.12.2018

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act 1988 as amended by PC (Amendment) Act 2018 Sections பிரிவுகள்: 7
   (ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை 1) 07.12.2018 | 18.00 hrs
   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை 2) 11.12.2018 | 12.30 hrs
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 12.12.2018 Time : நேரம் 07.00 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 12.12.2018 GD Vol. IV Time : நேரம் 07.00 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 65 கிமீ தென் கிழக்கு
   Beat Number : முறைக் காவல் எண் — (b) Address : முகவரி இளநிலை மின்பொறியாளர் அலுவலகம் மணக்கடவு. தாராபுரம் Tk, திருப்பூர் Dt.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் P. குமார் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் பெரியசாமி
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 47 | 18 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் விவசாயம் (g) Address : முகவரி க.எண். 64/2 கிழக்கு பெரியார் தெரு, தாராபுரம், திருப்பூர் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   திரு. தங்கமுத்து, இளநிலை மின் பொறியாளர், மணக்கடவு, தாராபுரம் Tk, திருப்பூர் Dt.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் ,

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

இத்துடன் தனித்தாளில்
இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் N. நசீர்தீந்திரன் பதவி காவல் துணை கண்காணிப்பாளர் நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

P. Kumar 12.12.2018

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையிட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

N. [signature]

Name: பெயர் N. நசீர்தீந்திரன்,
Rank: நிலை காவல் துணை கண்காணிப்பாளர், No. எண் ......
ஊழல் தடுப்பு மற்றும்
கண்காணிப்பு பிரிவு,
திருப்பூர். 12-12-18.

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

12. 12. 2018

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21 3 16(HCL-12)p 2

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது. கனம் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, தலைமைக் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்பூர் அவர்கள் முன்பாக.

திருப்பூர் ஊழல் தடுப்ப மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 3/2018/AC/TPR வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி...

திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் ஆகிய நான் 12.12.2018-ம் தேதி 07.00 மணியளவில் அலுவலகத்தில் ஆஜரில் இருந்த போது P.குமார், த/பெ.M.பெரியசாமி, 64/2, கிழக்கு பெரியார் தெரு, தாராபுரம், திருப்பூர் மாவட்டம் என்பவர் திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் ஆஜராகி எழுத்து மூலமாக கொடுத்த புகாரின் விபரம் பின்வருமாறு; அனுப்புநர்: P.குமார், த/பெ.M.பெரியசாமி, 64/2, கிழக்கு பெரியார் தெரு, தாராபுரம், திருப்பூர் மாவட்டம். பெறுநர்: காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருப்பூர். ஐயா, நான் தாராபுரத்தில் கதவு எண்.64/2 கிழக்கு பெரியார் தெருவில் குடியிருக்கிறேன். நான் தாராபுரம் பஸ் நிலையத்தில் பூ வியாபாரம் செய்கிறேன். தாராபுரம் தாலூக்கா மணக்கடவு கிராமம் கொல்லபட்டியில் இருக்கும் வேலுச்சாமி மற்றும் சுப்பிரமணி ஆகியோர்களிடம் இருந்து அவர்களுக்கு சொந்தமான மணக்கடவு கிராமம் புதிய ரீ சர்வே எண். 76/1A1A இரண்டு ஏக்கர் நிலத்தை ரூ.13,50,000/- என்று விலை பேசி 28.09.2010-ம் தேதி தாராபுரம் பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.10730/2010-ன் படி என் பெயருக்கு பதிவு செய்து கொண்டேன். மேற்படி இடத்தில் தங்குவதற்கு 17x11 அடி அளவில் ஒரு ரூம், பாத்ரூம் மற்றும் லெட்ரின் ரூம் கட்டியுள்ளேன். மேலும் அங்கு விவசாயத்திற்கு ஒரு போரும் போட்டுள்ளேன். சென்ற டிசம்பர் மாதம் கடைசி வாரத்தில் நான் மணக்கடவு E.B. அலுவலகத்திற்குச் சென்று அங்கிருந்த இளமின் பொறியாளர் திரு.கன்னிமுத்து அவர்களை சந்தித்து என்னுடைய மேற்படி இடத்தில் மல்லிகை பூச்செடி நட இருப்பதாகவும் அதனால் அங்கு நான் போட்டிருக்கும் போருக்கு மின் இணைப்பு வேண்டும் என்று கேட்ட போது நீ III A1 பிரிவில் பிறகு மின் இணைப்பு வாங்கிக் கொள்ளலாம் இப்போது 3 பேஸ் தற்காலிகமாக வீட்டு மின் இணைப்புக்கு விண்ணப்பம் கொடு என்று சொன்னார். அன்றே நான் 3 பேஸ் தற்காலிக வீட்டு மின் இணைப்புக்கு விண்ணப்பமும் தேவையான ஆவணமும் இணைத்து இளம் மின் பொறியாளர் திரு.கன்னிமுத்து அவர்களிடம் கொடுத்து இதற்கு எவ்வளவு பணம் கட்ட வேண்டும் என்று கேட்ட போது ரூ.6,300/- கட்ட

வேண்டும். ஆனால் எனக்கு தனியாக ரூ.2,000/- கொடுத்து விட்டு பிறகு ஆபீசில் ரூ.6,300/- செலுத்தி விடு என்றார். அதன் பிறகு அடுத்த நாள் மணக்கடவு E.B அலுவலகத்திற்குச் சென்ற போது J.E கன்னிமுத்து அங்கு இல்லை அலுவலகத்தில் இருந்தவரிடம் மின் இணைப்புக்கு ரூ.6,300/- கட்டுவதாக சொன்ன போது அங்கிருந்தவர் J.E சொன்னால் தான் பணம் கட்ட முடியும் என்றார். பிறகு மறுநாள் அலுவலகத்திற்கு சென்று J.E திரு. கன்னிமுத்து அவர்களிடம் வேறு வழியில்லாமல் அவர் கேட்ட ரூ.2,000/-த்தை கொடுத்த போது அதை அவர் வாங்கிக் கொண்டு அவரது அலுவலகத்தில் இருந்தவர்களிடம் என்னிடம் மின் இணைப்புக்கு ரூ.6,300/- வாங்கிக் கொண்டு ரசீது கொடுக்கச் சொன்னார். இதனால் நான் அங்கு இருந்தவரிடம் ரூ.6,300/- செலுத்தி அதற்கு ரசீது பெற்றுக் கொண்டேன். அதன் பிறகு எனக்கு மின் இணைப்பு கொடுக்க நான்கு மின் கம்பங்கள் புதிதாக நட்டார்கள். அதன் பிறகு எனக்கு தற்காலிக மும்முனை வீட்டு மின் இணைப்பு கொடுத்தார். என்னுடைய மின் இணைப்பு எண். 033 62 004454 ஆகும். அதன் பிறகு சென்ற மே மாதம் மின் கட்டணம் ரூ.2,029/- வந்தது. அதை செலுத்தி விட்டு மேற்படி மின் இணைப்பை நிரந்தா வீட்டு இணைப்பாகவோ அல்லது IIIA1 இணைப்பாகவோ மாற்றித் தருமாறு இரண்டுக்கும் விண்ணப்பம் தயார் செய்து கொண்டு J.E. கன்னிமுத்து அவர்களிடம் கேட்ட போது மாற்றித் தருகிறேன் என்று சொல்லி எதையும் செய்யாமல் என்னிடம் விண்ணப்பத்தையும் வாங்காமல் காலம் கடத்தி வந்தார். அதன் பிறகு இரண்டு மாத்த்திற்கு ஒரு முறை முதல் பில்லை விட அதிகமாக பில் வந்தது. அவைகளை நான் அவ்வப்போது செலுத்தி விட்டு என்னுடைய தற்காலிக மும்முனை மின் இணைப்பை புளோரிகல்சர் இணைப்பாக மாற்றித் தருமாறு J.E கன்னிமுத்து அவர்களிடம் கேட்ட போது இந்த தற்காலிக இணைப்பை நிரந்தர இணைப்பாக மாற்றி விட்டு பிறகு இதையே புளோரிகல்சர் இணைப்பாக மாற்றித் தருவதாக சொன்னார். கடைசியில் 12.11.2018-ம் தேதி நிரந்தர வீட்டு இணைப்பாக மாற்றப்பட்டது. அதன் பிறகும் டேரிப் சேஞ்-க்கு விண்ணபத்துடன் பல முறை மணக்கடவு E.B ஆபிஸ் சென்று J.E கன்னிமுத்து அவர்களை சந்தித்து என்னுடைய 1A வீட்டு மின் இணைப்பை IIIA1 இணைப்பாக மாற்றித் தருமாறு கேட்ட போது அப்போதும் என்னிடமிருந்து விண்ணபத்தை வாங்காமல் நீயே வைத்திரு வாங்கிக் கொள்கிறேன் என்று சொன்னார். சென்ற மாதத்தில் மேற்படி நிலத்திற்கு இரும்பு கேட் போடுவதற்கு மட்டும் J.E கன்னிமுத்துவிடம் சொல்லி விட்டு வெல்டிங் மிஷினுக்கு மின்சாரம் உபயோகப்படுத்தப்பட்டது.

அதன் பிறகு கடந்த 07.12.2018-ம் தேதி மணக்கடவு E.B அலுவலகத்திற்கு சென்ற போது மேற்படி அலுவலகத்திற்கு கீழே நின்றிருந்த J.E கன்னிமுத்துவை சந்தித்த போது அவர் தாராபுரம் E.E ஆபிசுக்கு மீட்டிங்க்கு போவதாகவும் அதனால் மாலை இங்கு வரமாட்டேன் என்றும் தாராபுரம் E.B ஆபிசுக்கு வெளியே என்னை வந்து இருக்குமாறும் சொன்னார். தாராபுரம் E.E ஆபிசுக்கு எதிரே காத்திருந்த என்னை அன்று மாலை சுமார் 6 மணிக்கு தாராபுரம் E.E ஆபிசுக்கு வெளியே வந்த J.E திரு.கன்னிமுத்து அவர்கள் என்னை அருகே இருந்த டீ கடைக்கு கூட்டிச் சென்று பேசிக் கொண்டிருந்த போது இது வரை மின்சாரம் உபயோகப்படுத்தப்படாமலேயே ரூ. 10,000/-க்கு மேல் கட்டணம் செலுத்தி விட்டதாக நான் சொன்ன போது என்னிடமிருந்த டேரிப் சேஞ் அப்பிளிகேசனை J.E. கன்னிமுத்து வாங்கிக் கொண்டார். அத்துடன் நான் இணைத்திருந்த என்னுடைய மேற்படி இடத்திற்கான பத்திரம், பட்டா, அ பதிவேடு, அடங்கல், VAO சான்று, மேப், என்னுடைய போட்டோ ஒன்று, நான் கட்டிய கரண்ட் பில் ஆகியவற்றின் நகல்களை இணைத்திருந்ததை ஒவ்வொன்றாக பார்த்து விட்டு சரியாக உள்ளது என்றார். டேரிப் சேஞ்க்கு செலுத்த வேண்டிய தொகையை நாளை அலுவலகத்தில் செலுத்துவதாக நான் சொன்ன போது கன்னிமுத்து அவர்கள் டேரிப் 1A-ல் இருந்து டேரிப் IIIA1-க்கு மாற்ற எனக்கு தனியாக ரூ.2,000/- கொடுத்த பிறகு தான் நீ அரசுக்கு கட்ட வேண்டிய பணத்தை கட்ட முடியும் என்று கறாராக சொல்லிவிட்டார். அதன் பிறகு நேற்று 11.12.2018-ம் தேதி மதியம் சுமார் $12^{1/2}$ மணிக்கு மணக்கடவு E.B அலுவலகம் சென்று அங்கிருந்த J.E கன்னிமுத்து அவர்களிடம் டேரிப் சேஞ்க்கான பணத்தை கட்ட வந்திருப்பதாக சொன்ன போது நீ எனக்கு தனியாக ரூ.2,000/- கொடுத்த பிறகு தான் நீ கட்ட வேண்டிய கட்டணத்தை கட்ட முடியும் நீ எனக்கு ரூ.2,000/- தனியாக கொடுத்தால் டேரிப் சேஞ்க்கான அனைத்து வேலைகளையும் பார்த்து A.Dயிடம் கையெழுத்து வாங்கி 10 நாளில் டேரிப் மாற்றித் தருவதாக சொன்னார். இல்லையென்றால் நான் இந்த அலுவலகத்தில் இருக்கும் வரை உன்னால் டேரிப் மாற்ற முடியாது என்று கறாராக சொல்லி விட்டார். எனக்கு லஞ்சம் கொடுக்க விருப்பம் இல்லை. எனவே என்னுடைய டேரிப் 1Aல் இருந்து டேரிப் IIIA1-க்கு மாற்றித் தர ரூ.2,000/- லஞ்சம் கேட்கும் மணக்கடவு இளம் நிலை மின்பொறியாளர் திரு.கன்னிமுத்து மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு, Sd/- xxxx (P.Kumar). 12-12-2018. Sir, Received the above said written complaint on

12.12.2018 at 07.00 hrs. The genuineness of the compliant was verified through sources and found to be genuine and the integrity and antecedents of the accused also verified through sources and found to be bad. Hence, I registered a case in Tiruppur Vigilance and Anti-Corruption Cr.No.3/2018/AC/TPR u/s 7 of PC Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 at 08.30 hrs today on 12.12.2018 and took up for investigation. Sd/- xxxx, N.Ravichandran, 12-12-18, DSP, VAC, TPR.

Original FIR along with original written complaint of Tr.P.Kumar, S/o.M.Periasamy, 64/2, East Periyar Street, Dharapuram, Tiruppur District is submitted to the Hon'ble Chief Judicial Magistrate cum Special Judge, Chief Judicial Magistrate Court, Tiruppur and a Copy of FIR is submitted to the Director, Vigilance and Anti-Corruption, Chennai.

(N.Ravichandran)
Deputy Superintendent of Police,
Vigilance and Anti-Corruption,
Tiruppur. 12.12.18